# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

# அசல் வழக்கு எண்.19/14

2018 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 06-ம் நாள் வியாழன் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1 குணசேகர் என்பவரது குறுக்கு விசாரணை, திரு.பண்டாரம், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை 10,11வது பிரதிவாதி தரப்பில்**

வழக்கு தாக்கல் செய்யும்போது 10,11 பிரதிவாதிகளை சேர்க்கவில்லை என்றால் சரி. வழக்கு நிலுவையில் இருந்தபோது தான் அவர்கள் சொத்துக்களை வாங்கினார்கள். வழக்கு நிலுவையில் இருப்பதாகவும் சொத்துக்களை யாரும் வாங்க கூடாது என்றும் நான் பொது விளம்பரம் எதுவும் தரவில்லை என்றால் சரி. 10,11 பிரதிவாதிகள் சொத்தை வாங்கியபோது பட்டா, பத்திரம், விலலங்க சான்றிதழ் ஆகியவற்றை பார்த்து அதன்பிறகு சரியாக இருப்பதால் சொத்தை வாங்கினார்கள் என்றால் என்னுடைய சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் ஆகும். இந்த பிரதிவாதிகள் சொத்துக்கள் சரியாக இருப்பதால் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் வாங்கியுள்ளார்கள் என்றாலும் அதனால் இந்த வழக்கில் அவர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு பாகம் கிடைத்தால் 10,11 பிரதிவாதிகளுக்கு அவர்கள் கிரையம் பெற்ற சொத்துக்களை என் தம்பி சிவகுமாருக்கு கிடைக்ககூடிய பாகத்தில் இருந்து அந்த சொத்துக்களை 10,11 பிரதிவாதிகளுக்கு ஒதுக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரி. இந்த சொத்துக்களில் எனக்கு எந்த பாகமும் கிடையாது என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.